பக்கங்கள் 14 + 2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 02 ஞாயிற்றுக்கிழமை 17.11.2024 அதிர்வு 108

## எம்.பி. ஆகிறார் திலித் ஜயவீர



சர்வஜன அதிகாரம் கட்சிக்குக் கிடைக்கப் பெற்ற தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்குக் கட்சியின் தலை 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் சத்தியலிங்கத்துக்கு!

## சுமந்திரன் அறிவிப்பு

(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்தைக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்கு வழங்க கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது. 02▶

# வவுனியாவில் இன்று சிவமோகன் வழங்கிய குற்றப்பத்திரிகையை வாங்க மறுத்த சுமந்திரன்

(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையின் பிரதியை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் வவுனியாவில் இன்று வைத்து வழங்க முற்பட்டபோது அதனைக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வாங்க மறுத்தார்.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் வவுனியா – ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இன்று நடைபெற்றது.

இதன்போது கட்சியின் பதில் பொதுச்செயலாளரின் பொறுப்பற்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் கட்சியின் கூட்டுப் பொறுப்பு உருக்குலைக்கப்பட்டது எனவும், அதனை விசாரணை செய்யுமாறு 02▶



# தமிழரசின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக சிறீதரனும் கொறடாவாக சத்தியலிங்கமும் தெரிவு

(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும், கட்சியின் நாடாளுமன்ற கொறடாவாக ப.சத்தியலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக் கூட்டம் வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இன்று இடம்பெற்ற பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதில் பல கருத்து ரீதியான வேறுபாடுகளைக் கடந்து எல்லோரது விருப்பங்களுடன் மன்னார், வவுனியா ஆகிய இடங்களின் இடைவெளியைக் கருத்தில்கொண்டும் இம் மாவட்டங்களில் இடம்பெறும் ஆக்கிரமிப்புக்களைக் கவனத்தில் கொண்டும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்குத் தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எல்லோரையும் அரவணைத்து 2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு இருந்ததோ அதைப் போல் அனைவரையும் அரவணைத்துச் செல்ல நாம் தயாராக இருக்கின்றோம். எமது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூட மக்களிடம் நான் இதனைத் தெரியப்படுத்தியிருந்தேன். ஆகவே, நாங்கள் ஒன்றாகப் பலமாக இணைந்து பயணிக்க வேண்டிய தேவையை உணர்ந்திருக்கின்றோம்.



தமிழரசுக் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் நான். நீதிமன்ற வழக்கில் இருப்பதால் அது நீக்கப்பட்ட பின் செயற்படுவேன். இதற்கான காலம் கனிந்து கொண்டிருப்பதாக நான் உணர்கின்றேன். இப்போது நாடாளுமன்றக் குழுவின் தலைவராகவும் என்னை உயர்மட்டக் குழுவில் நியமித்துள்ளார்கள்.

8 இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கான கட்சியின் குழுவின் தலைவராக நானும், பிரதம கொறடாவாக ப.சத்தியலிங்கமும், தீர்மானக் குழுவில் நானும் சாணக்கியனும் செயற்படப் போகின்றோம்.

எமது கட்சியின் பேச்சாளரை 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து முதலாவது அமர்வு நிறைவடைந்த பின் தீர்மானிப்பதாக முடிவெடுத்துள்ளோம்.

8 நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருந்து ஒருவரே தெரிவு செய்யப்படுவார். அத்துடன் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றுமையாகப் பயணிப்பதுடன் ஏனையவர்களையும் அரவணைத்துச் செல்ல முடிவெடுத்துள்ளோம்." – என்றார்.

---

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனால் கட்சியின் பதில் பொதுச்செயலாளருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

அந்தக் குற்றப்பத்திரிகையின் பிரதியை இன்றைய கூட்டத்துக்கு வருகை தந்த அனைவருக்கும் சிவமோகன் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் சுமந்திரனுக்கும் அதனை வழங்க முற்பட்டபோது அவர் அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டுச் சென்றார்.

அந்தக் குற்றப்பத்திரிகையில், கட்சி மாநாட்டுக்கு முன்னர் ஆலோசனைக் கூட்டம் நடத்தாமை, சுகயீனம் எனக் கூறி பொதுக்குழு கூட்டத்துக்கு வராமை, யாப்புக்கு முரணாகத் தேர்தல் நியமனக் குழுவை நியமித்தமை, கட்சி உருக்குலைய காரணமாக இருந்தமை, முல்லைத்தீவு மாவட்டக் குழுவின் ஆலோசனையின்றி தேர்தல் நியமனங்கள் வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சிவமோகன்,

"தோற்றவர்கள் நாடாளுமன்றத் தேர்தல் கேட்கக் கூடாது என்று சொன்னவர் யார்? அப்படி ஒரு முடிவு கட்சி எடுக்கவில்லை. கட்சி எடுக்காத முடிவை கட்சியின் பேச்சாளர் என்ற போர்வையில் உட்புகுத்தக் கூடாது.

முஸ்லிம்களை விடுதலைப்புலிகள் இனச்சுத்திகரிப்பு செய்தார்கள் என்ற அவரது கருத்து தமிழரசுக் கட்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. அது கட்சி எடுத்த முடிவா? இல்லையே. போரை நீங்கள் ஏற்கவில்லை. நீங்கள் கொழும்பில் இருந்தீர்கள், நாங்கள் இந்த மண்ணில் இருந்தோம். அதை ஏற்பதா? இல்லையா? என்று நாங்களே தீர்மானிக்க வேண்டும். அதை நீங்கள் சொல்லத் தேவையில்லை.

தோற்றவர்கள் மீண்டும் தேர்தல் கேட்கக் கூடாது என்று கூறிவிட்டு தேசியப் பட்டியல் வழங்குவதற்கு இனி இங்கு போராட்டம் நடக்கும். நான் எடுக்கமாட்டேன் என்று சொல்லி அவரும், நீங்கள் எடுங்கோ என்று எங்கட ஆக்களும் சொல்லி சில நேரம் கொடுக்கப்படலாம். அது பிழை.

படுதோல்வியடைந்த சுமந்திரன் மற்றும் தமிழரசுக் கட்சியை உருக்குலைத்த சத்தியலிங்கம் ஆகியோர் தாங்களாகவே பதவிகளில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

தேசியப் பட்டியல் ஆசனத்தை வன்னிக்குக் கொடுக்க வேண்டும் என்றால் அது இரண்டாவது விருப்பு வாக்கை எடுத்த வருக்கே வழங்க வேண்டும்." – என்றார்.

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் வவுனியா – ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்கும் விடயம் தொடர்பாக நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன.

விவாதங்களின் பின்னர் குறித்த தேசியப் பட்டியல் ஆசனத்தை ஏற்கனவே வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த வைத் தியர் ப. சத்தியலிங்கத்துக்கு வழங்கு வதற்கு அரசியல் குழுவால் தீர்மானிக் கப்பட்டது என்று சுமந்திரன் மேலும் கூறினார்.

---

## எம்.பி. ஆகிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் தொழிலதிபர் திலித் ஜயவீரவை நியமிக்க சர்வஜன அதிகார உயர்பீட குழு தீர்மானித்துள்ளது.

அது தொடர்பான தீர்மானத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இன்று அறிவித்துள்ளது.






# யாழில் மதத் தலைவர்களிடம் ஆசி பெற்ற சிறீதரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்,
ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன், நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள இந்து, கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மதத்தலைவர்களை நேரில் சந்தித்து ஆசி பெற்றார்.

நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் பத்மதயாளன் அடிகளார் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தினதும் சிவபூமி அறக்கட்டளையினதும் தலைவர் கலாநிதி.ஆறுதிருமுருகன் ஆகியோரை நேரில் சந்தித்து, அவர்களிடம் ஆசி பெற்றார். இதன்போது தமிழ் மக்களின் அடுத்த கட்ட அரசியல் செயல் நோக்குகள், முன்கொண்டு செல்ல வேண்டிய விடயங்கள் குறித்தும் சிறீதரன் கலந்துரையாடியிருந்தார்.















# வவுனியாவில் கிணற்றில் வீழ்ந்து 8 வயது சிறுவன் பரிதாப மரணம்!

(கி.வசந்தன்)

வவுனியா, கள்ளிக்குளம் பகுதியில் 8 வயது சிறுவன் ஒருவர் கிணற்றினுள் தவறி வீழ்ந்து சாவடைந்துள்ளான்.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்படி சிறுவன் கிணற்றுப் பகுதிக்குச் சென்று தண்ணீர் அள்ளியுள்ளான். இதன்போது தவறி உள்ளே வீழ்ந்துள்ளான்.

உறவினர்களால் சிறுவன் மீட்கப்பட்ட போதிலும் அவன் உயிரிழந்துள்ளான் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் கள்ளிக்குளம் பகுதியைச் சேர்ந்த க. டிலக்சன் என்ற 8 வயது சிறுவனே இவ்வாறு சாவடைந்துள்ளான்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# வெடி விபத்தில் இளைஞர் சாவு!

அங்குனுகொலபெலஸ்ஸ ரன்ன வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் உள்ள கார்களுக்கு வர்ணம் பூசும் கராஜுக்குள் இருந்த இரும்பு பெரல் திடீரென வெடித்து அதன் மேல் மூடி கராஜில் வேலை செய்து கொண்டிருந்தவர் மீது விழுந்ததில் 18 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அகுன கொலபெலஸ்ஸ 128/02 ரன்ன வீதியில் வசிக்கும் சதீப சித்மின என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வெடித்துச் சிதறிய இரும்பு பெரல் கராஜில் வாகனங்களுக்குப் பெயிண்ட் தின்னர் கொண்டு வரப் பயன்படுத்தப்படும் வெற்று இரும்பு பெரல் எனவும், அதில் இருந்த கேசே பெரல் வெடிப்பதற்கான காரணமாக இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெடித்த பெரலின் மூடி பகுதி கழன்று வீசப்பட்டு இளைஞரின் கழுத்துப் பகுதியில் பலத்த வெட்டுக் காயங்கள் ஏற்பட்டதால் இளைஞர் அகுனகொல பெலஸ்ஸ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.




# ஐக்கிய மக்கள் சக்தி வெற்றியை அடுத்து மன்னாரில் பொங்கல்!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் விவசாயிகள், மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு எமது அரசு நிரந்தர தீர்வு தரும் என்ற நம்பிக்கையுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மொஹமட் சாஜித் தெரிவித்துள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை (16) மன்னார் நானாட்டான் பிரதேசத்தில், நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றியை முன்னிட்டு நடைபெற்ற அமைதியான வெற்றிக் கொண்டாட்டத்துக்கான பொங்கல் நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கை வரலாற்றில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் எமது கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. இது ஒரு வரலாற்றுச் சாதனை ஆகும்.

தமிழ் முஸ்லிம் சிங்களவர் என்ற இன, மத, பேதம் இல்லாமல். அனைத்து மக்களும் ஒன்றிணைந்து வாக்களித்துள்ளார்கள்.

இந்த வெற்றிக்காக உழைத்து எங்களோடு சேர்ந்து பயணித்தவர்களுக்கும் வாக்குகளை வழங்கிய இப்பிரதேச மக்களுக்கும் நன்றி செலுத்தும் முகமாகவே மிகவும் அமைதியான முறையில் இங்கு பொங்கல் செய்து கொண்டாடுகிறோம்.- என்றார்.

நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

# பெண்களின் பிரதிநிதித்துவத்தை வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர்

## தேசிய மக்கள் சக்தியின் எம்.பி. நிலாந்தி கோட்டஹாச்சி

இலங்கையில் உள்ள வாக்காளர்கள், சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் சித்தாந்தத்தை மதித்து அங்கீகரித்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கோட்டஹாச்சி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஒரு நாளுக்குப் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் சட்டங்களும் கொள்கைகளும் தொகுக்கப்படும் இடம் நாடாளுமன்றமாகும். அத்துடன் பொருளாதாரம் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் இடமும் நாடாளுமன்றமாகும் என்று கோட்டஹாச்சி கூறியுள்ளார்.

இந்த நிலையில், நாடாளுமன்றத்திலும், உள்ளூராட்சி மட்டத்திலும் கூட அதிகமான பெண்களை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும் என்ற சித்தாந்தம் இருந்து வந்தது.

இந்த சிந்தாந்தத்தை இலங்கை மக்கள் இந்த ஆண்டு



பொதுத் தேர்தலில் அங்கீகரித்து, அதிக பெண்களை நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுத்துள்ளனர் என்றும் கோட்டஹாச்சி தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சாதனைத் தேர்தல்

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் பாரம்பரியமான கட்சிகளுக்கு பல பாடங்களைப் போதித்துள்ள அதே நேரம், இலங்கைத் தேர்தல் சரித்திரத்தில் பல விடயங்களை முதல் தடவையாக சாதித்துமிருக்கின்றது.

இந்தத் தேர்தலில் அதிசயத்தக்க - ஆச்சரியமான - அபூர்வமான - வெற்றியை ஈட்டி இருக்கும் தேசிய மக்கள் சக்தி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைத் தனி கட்சியாக முதல் தடவையாக எட்டியிருக்கின்றது. அது மாத்திரமல்ல. இந்த நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமானோர் புது முகங்கள். இது நாடாளுமன்ற சரித்திரத்தில் ஒரு முக்கிய விடயம்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து முடிந்த தேர்தல்களில் எல்லாம் பெரும்பாலும் கொழும்பு மாவட்டத்தின் ஒவ்வொரு வாக்களிப்புப் பிரிவிலும் (தொகுதியிலும்) ஐக்கிய தேசியக் கட்சியும், பின்னர் அதில் இருந்து பிரிந்து உருவான ஐக்கிய மக்கள் சக்தியும் வெற்றி பெற்று வந்திருக்கின்றன. ஆனால் இம்முறை கொழும்பு வாக்களிப்பு பிரிவு ஒவ்வொன்றையும் தேசிய மக்கள் சக்தியிடம் அவை முழுமையாகப் பறிகொடுத்துத் தோற்றுப் போய் உள்ளன.

நாட்டிலுள்ள 152 தேர்தல் பிரிவுகளில் - தொகுதிகளில் - வெற்றியீட்டியதன் மூலம் இலங்கையின் சரித்திரத்தில் ஆகக்கூடிய தொகுதிகளை வென்ற பெருமையை தேசிய மக்கள் சக்தி ஈட்டி இருக்கின்றது.

மாவட்ட ரீதியிலும், தேசிய பட்டியல் அடிப்படையிலும் ஒரு கட்சி ஆகக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை பெற்றிருப்பது இதுவே முதல் தடவை.

தேசிய கட்சி ஒன்று வடக்கு மாகாணத்தின் இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் - யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் - வெற்றியீட்டியிருப்பது சரித்திரத்தில் முதல் தடவையாகும்.

இந்த வெற்றியை அடுத்து "நாடாளுமன்றத் தேர்தலில் எமக்குக் கிடைக்கப் பெற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை விடவும் வடக்கில் இரண்டு தேர்தல் மாவட்டங்களையும் வென்று தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றமை பெரும் பலமாகும்." என்று ஆளும் தரப்பில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், ஜே.வி.பியின் செயலாளருமான ரில்வின் சில்வா கூறியிருக்கின்றமை இந்த வெற்றியின் அர்த்த பரிமாணத்தைப் புலப்படுத்த வல்லது.

இலங்கை நாடாளுமன்றத்தில் முதல் தடவையாக பத்து வீதத்திற்கும் அதிகமானோர் பெண்களாக இம்முறை தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

முன்னைய பொதுத் தேர்தலில் ஐந்து வீதத்துக்கு குறைவான வாக்கை பெற்ற ஒரு கட்சி அடுத்த தேர்தலில் 61.56 வீத வாக்குகளைச் சுவீகரித்து சாதனையைப் படைத்திருக்கிறது.

அமைச்சர் விஜித ஹேரத் தனி வேட்பாளராக கம்பஹா மாவட்டத்தில் தமது கட்சிக்கு பதிவான வாக்குகளில் 80 வீதமான விருப்பு வாக்குகளை பெற்று சாதனை படைத்திருக்கிறார். அதேசமயம் பிரதமர் ஹரிணி அமரசூரிய கொழும்பு மாவட்டத்தில் தமது கட்சி பெற்ற வாக்குகளில் 83 வீத வாக்குகளை விருப்பு வாக்குகளாகப் பெற்று சாதனை நிலைநாட்டியிருக்கிறார்.

இவ்வாறு பல புதிய சாதனைகளோடு நாடாளுமன்றுக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அந்த சாதனைகளின் வரிசையில் கடந்த 46 வருடங்களாக நடைமுறையில் இருக்கும் தற்போதைய அரசமைப்பை முழுமையாக மாற்றி அமைக்கும் நடவடிக்கையையும் முன்னெடுத்து அதிலும் ஒரு சாதனையை படைப்பதற்கான வாய்ப்பு அதற்குக் கிட்டி இருப்பது கவனிக்கத்தக்கது.



# சந்நிதியான் ஆச்சிரம ஆன்மீக நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ, கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வு வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்றது.

இதில் ஆறுமுகமான பொருள் எனும் ஆன்மீகத் தலைப்பில் ஆன்மீக சொற்பொழிவை அ.அமுதாஸ் நிகழ்த்தினார்கள்.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி அன்னசத்திரம் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள் என பலரும் கபந்துகொண்டனர்.





# சுயேச்சைக் குழு வேட்பாளர் ஒருவரது வீடு மீது தாக்குதல்

(எம். எப். றிபாஸ்)

திகாமடுல்ல மாவட்டத்தில் சுயேச்சை குழு ஒன்றில் போட்டியிட்ட வேட்பாளர் எம்.ஏ.எம்.இத்ரீஸின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள இவரது வீட்டின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு (12) இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவ தினம் அவர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போதே இனம் தெரியாத நபர்கள் அத்துமீறி நுழைந்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துள்ளனர். ஏனைய பொருள்களுக்கும் சேதம் விளைவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# பாரிசில் மாவீரர் தின நிகழ்வுகள்

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் பாரிசில் Massy palaiseau பகுதியில் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அதேவேளை, வழமைபோன்று பிரான்சின் ஏனைய வெளி மாநிலங்களிலும் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் உபகட்டமைப்புக்களால் மாவீரர் நாள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரார்ஸ்பேர்க், மூல்கவுஸ், நீஸ், துலுஸ், லியோன், நெவர்,போர்தோ, துருவா ஆகிய நகரங்களில் மாவீரர் நாள் ஏற்பாடுகள் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# தீர்க்கமான வெற்றியைப் பதிவு செய்துள்ளது தேசிய மக்கள் சக்தி!

## ஈரோஸ் ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(பழுவூரான்)

தேசிய மக்கள் சக்தி தீர்க்கமான வெற்றியை பதிவு செய்துள்ளது. இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்தவர்களுக்கு மக்கள் தெளிவான செய்தியைச் சொல்லியுள்ளார்கள். இந்த வெற்றியில் தமிழ் மக்களின் பங்களிப்பும் நிறைந்திருக்கின்றது என்பதோடு, மலையக தமிழ் பெண்கள் மூவர் உட்பட அதிகமான பெண்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்துச் செல்வது விசேட கவனத்துக்கு உரியது. இதை சாத்தியமாக்கிய,இலங்கை அரசியல் வரலாற்றில் புதிய திருப்பமும், அரசியல் கலாசாரமும் ஏற்படுவதற்குக் காரணமான தேசிய மக்கள் சக்திக்கும் அதன் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார தோழருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு ஈரோஸ் ஜனநாயக முன்னணிப் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மை பெற்று வெற்றியீட்டியமையைப் பாராட்டி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



அவ்வூடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

நீங்கள் எதிர்பார்க்காத வெற்றியை மக்கள் உங்களுக்குத் தந்துள்ளார்கள். இதன்மூலம் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கும் இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதற்கும், மலையக மக்க ளின் நிலவுரிமை, அவர்களுடைய அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்காண்பதற்குமான ஆணையை மக்கள் வழங்கியுள்ளார்கள்.

எனவே மக்களின் எதிர்ப்பார்ப்பை நிறைவேற்றுவதற்கான சாத்தியமான நடவடிக்கைகளை தேசிய மக்கள் சக்தி அரசசு முன்னெடுக்குமென நம்புகின்றோம்.

நாட்டில் தேவையற்ற வீண்விரயங்களைத் தவிர்த்து உற்பத்தி மற்றும் விவசாயப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். ஒரு அங்குல விவசாய நிலமும் தரிசாக கிடக்கக் கூடாது. விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் திட்மிட்டு காடாக்கப்பட்டு கைவிடப்பட்ட பெருந்தோட்ட தேயிலை விளைநிலங்களை மீளவும் நடுகைக் குட்படுத்த உங்கள் அரசு நடவடிக்கைகள் எடுக்குமென எதிர்ப்பார்க்கின்றோம்.

புதிய அரசு முன்னெடுக்கும் விவசாய மற்றும் உற்பத்திப் போராட்டத்துக்கு நாங்களும் ஒத்துழைப்பை வழங்கும் அதேவேளை, தமிழ் பேசும் சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான எமது முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

உங்கள் அரசு நாட்டினது பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் காட்டும் அக்கறையை வடக்கு, கிழக்கு, மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கும் செலுத்துவீர்கள் என்ற நம்பிக்கையுடன், நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்த அரசாங்கமாக அமைய வேண்டும் என்று மீண்டும் வாழ்த்துகிறேன்.– என்றுள்ளது.

# கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் ஜமீல் அரசியலில் இருந்து ஓய்வாகிறார்!

## அவரே அறிக்கையில் தெரிவிப்பு

(எம். எப். றிபாஸ்)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி சார்பாக சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜமீல் தனது நேரடி அரசியல் செயற்பாட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார் என்று அறிவித்துள்ளார்.

தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றிகளை தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எனது கடந்த கால செயற்பாடுகளையும், சமூக முன்னேற்றத்துக்காக நான் ஆற்றிய பணிகளையும் கருத்தில் எடுத்து, எனக்காக வாக்களித்த மக்களுக்கு இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கான தேர்தல் பிரச்சாரங்களில் மாவட்டம் முழுவதும் இரவு, பகலாக அர்ப்பணிப்புடன் களப் பணியாற்றிய செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் விசேடமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவப் பருவத்தில் இருந்தே சமூகப் பணியில் செயலாற்றி வந்த நான் எனது சாய்ந்தமருது மண்ணுக்கும், கல்முனை தொகுதிக்கும் முழு அம்பாறை மாவட்டத்துக்கும் அரசியல் அதிகாரத்தின் ஊடாக முடியுமான அளவு தொண்டாற்ற வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் இந்தத் தேர்தலில் களமிறங்கியிருந்தேன்.

கல்முனை தொகுதியின் பிரதிநிதித்துவம் இழக்கப்போகும் அபாயத்தை உணர்ந்தே உடல் நலம் முழுமையாக தேறாத நிலையிலும் இறுதி நேரத்தில் வேட்புமனுவில் கையெழுத்திட்டு மக்கள் மன்றத்தில் தோன்றி - அரசியல் கள நிலைவரங்களை எடுத்துக் கூறினேன்.

நாட்டில் மாற்றத்தையும் மறுமலர்ச்சியும் எதிர்பார்த்த அதிகமான மக்கள் ஜனாதிபதி தலைமையிலான கட்சிக்கு வாக்களித்து கல்முனை தொகுதிக்கான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்து விட்டு, கைசேதப்பட்டு புலம்பிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

எமக்குத் தெளிவான வெற்றி வாய்ப்பு காத்திருந்தும் சிலரது பிழையான வழிகாட்டல் காரணமாக எம்மைப் புறந்தள்ளி விட்டு, மாற்றம் வேண்டி வாக்களித்ததால் நமக்கான பிரதிநிதித்துவத்தைப் பறிகொடுக்கும் வரலாற்றுத் தவறைச் செய்து விட்டோம் என்று இப்போது கைசேதப்படுவதில் பயனில்லை.



மேலும், எனது வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உத்தரவாதமளித்து விட்டு இறுதி நேரத்தில் கழுத்தறுப்புச் செய்தவர்களின் துரோகத்தனத்தை இறைவனிடமே பாரம் சாட்டுகின்றேன்.

எவ்வாறாயினும் எனது அரசியல் வகிபாகத்தை நிராகரித்த மக்களின் நிலைப்பாட்டை மனமுவந்து ஏற்றுக் கொள்கிறேன்.- என்றுள்ளது.





# அகில இலங்கை நடன போட்டியில் சிசிலியா பெண்கள் கல்லூரி முதலிடம்

(பழுவூரான்)

தேசிய மட்ட அகில இலங்கை நடனப் போட்டி 2024 இல் புனித சிசிலியா பெண்கள் கல்லூரி மாணவிகள் முதலிடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அந்த வகையில் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட குரவை நடனம் மற்றும் உலக்கை நடனம் ஆகியவற்றில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று மட்டக்களப்புக்கும் தமது கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி நிதாஞ்சலியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் ஆசிரியர் திருமதி பிரேம நந்தினி விஜயசேகரனின் நெறிப்படுத்தலில் மாணவிகள் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

# ‘தமிழர் மரபுரிமை வாரம்’ சிட்னியில் பிரகடனம்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**






சிட்னியில் கம்பர்லேண்ட் நகர சபை எதிர்வரும் 2025 ஜனவரி 13 முதல் 19 வரை “தமிழர் மரபுரிமை வாரமாக” குறிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இந்தத் தீர்மானம் கவுன்சிலர் சுஜன் செல்வனால் முன்மொழியப்பட்டது. பிரேரணைக்கு கவுன்சிலர் சுமன் சாஹாவால் ஆதரவு வழங்கப்பட்டது. நகர மேயர் கவுன்சிலர் ஓலா ஹமேட் மற்றும் மற்ற அனைத்து கவுன்சிலர்களால் ஆதரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவில் தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கம்பர்லேண்ட் நகர சபை அங்கீகரித்ததை சிட்னி வாழ் தமிழ் சமூகம் பெரிதும் பாராட்டியுள்ளது.

புலம் பெயர் மண்ணில் எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். இதற்கு அங்கீகாரமாக தற்போது சிட்னியில் ‘தமிழர் மரபுரிமை வாரம்’ பிரகடனம் வெளிவந்துள்ளது.

அதே போன்று பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் என்றென்றும் மதிக்கப்பட வேண்டியவை. தமிழ்மொழி போன்ற உலகின் மூத்த மொழி நிச்சயம் பாதுகாக்கப்பட்டே ஆக வேண்டும். அதனைப் பாதுகாப்பதற்கான வளமும், வலிமையும் இன்றைய சந்ததியினரிலேயே தங்கியுள்ளது.

இன்றைய உலகம் பல சவால்கள் நிறைந்ததாக உள்ளது. எமது தலைமுறையில் நாம் எதிர்கொண்ட சவால்களை விடவும் அதிக சவால்களை தற்போதைய தலைமுறை எதிர்கொள்கின்றது. சவால்களை சிறப்பாக எதிர்கொள்பவர்களே வாழ்க்கையில் வெற்றிகரமான மனிதர்களாக விளங்க முடியும்.

இன்று நாம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்ள தமிழ்மொழி அறிவு இன்றைய தலைமுறைக்கு அல்லது அடுத்துவரும் தலைமுறைக்கு அவசியமாக ‘தமிழர் மரபுரிமை வாரம்’ பிரகடனம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ் மொழி, பல நூற்றாண்டுகளாக, பல்வேறு போர்களையும், பிறமொழித் தாக்குதல்களையும் எதிர்கொண்டு, சமாளித்து நின்று நிலைத்த எம் தாய் மொழி தொடர்ந்தும் அவ்வாறு நிலை கொள்ள வேண்டுமாயின், புலம் பெயர் மண்ணிலும் நிலைத்து நிற்க பெரும் பணிகள் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

கம்பர்லாந்து நகர சபை தமிழர் கலை கலாச்சார பண்பாட்டை கொண்டாடுவதற்காக அடுத்த ஆண்டு தைப்பொங்கல் நாளை ஜனவரி 13 – 19 வரையான நாள்களை தமிழர் மரபுரிமை வாரம் எனப் பிரகடனப்படுத்தியுள்ளமை இங்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த பெரும் அங்கீகாரமாகும்.



# தொழுநோய் விழிப்புணர்வும் நாட்டுக்கோழி கண்காட்சியும்!

**(கல்லடி செய்தியாளர்)**

தொழுநோய் விழிப்புணர்வும் இயற்கை நேய நாட்டுக்கோழிக் கண்காட்சியும் அருட்பணி ரி.எஸ். யோசுவா தலைமையில் மட்டக்களப்பு அமெரிக்கன் மிசன் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (15) இடம்பெற்றது.

'பிரபஞ்ச நேசம்' எனும் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

தொழுநோயை முற்றாக அகற்றுதற்கு மக்கள் மத்தியில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு காவேரி கலாமன்றத்தால் பல வேலைத் திட்டங்கள் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



தொழுநோயைப் பூரணமாகக் குணப்படுத்துவதற்கான மருத்துவம் தற்போது காணப்படுகின்ற போதும் மக்கள் மத்தியில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வின்மையே இந்த நோய் பரவுவதற்கான பிரதான காரணமாக உள்ளது.

இந்த நிகழ்வில் 21 வகையான நாட்டுக்கோழிகள் காட்சிப்படுத்தப்பட்டது. அவற்றின் தன்மை தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது சிறப்பான முறையில் கோழிகளை பராமரிப்பவர்களுக்கு பணப் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் காவேரி கலா மன்றத்தின் இணைப்பாளர் அருட்தந்தை ஏ. எஸ். ரூபன், விவசாயப் போதனாசிரியர்கள், கால்நடைத் திணைக்கள அதிகாரிகள், கோழிப் பண்ணையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.









# அத்தியாவசிய தேவையின் அமைவிடம்!



பெட்டிக்கடையா! எங்கோ கேட்ட ஞாபகமாய் இருக்கின்றதா? ஆம் உங்கள் வீட்டு தெருமுனையில் உங்களோடு இணைந்திருக்கும் நபரின் கடை தான். சொந்தக்காலில் நிற்கப் போராடிக் கொண்டிருக்கும் பெட்டிக்கடை. இன்று மக்கள் மத்தியில் பல்வேறு கடைகள் தோற்றம் பெற்றாலும் கிராம மக்கள் மத்தியில் முக்கியமான இடத்தை பெட்டிகடைகளே என்றும் பிடித்துள்ளன.

பண்பாட்டையும் பொருளாதார நிலையையும் எடுத்துக்காட்டுகின்றதாகவும் அமைகின்றன. பெட்டிக்கடைகளே நிரந்தரமானதாகவும் நிரந்தரமற்றதாகவும் அமைக்கப்படும். இவை தெருவோரங்களில் மழை,வெயில் பாராது திண்டாடிக் கொண்டு இருக்கின்றன.



ஓலைமற்றும்தகரம்கொண்டுஅமைக்கப்பட்டிருக்கும். இதன் வெளி தோற்றம் பார்ப்பதற்கு பெரிய பெட்டி போல் காட்சியளிக்கும் சிறிய தொழில் முயற்சியாகும். ஆரம்ப காலத்தில் இதன் தோற்றம் ஒவ்வொருத்தரும் தமது தேவையை நிறைவேற்ற தம்மிடம் அதிகமாக உள்ள பொருள்களை கொடுத்து இல்லாத பொருள்களை மற்றவர்களிடம் இருந்து வேண்டியுள்ளனர். அவற்றின் தொடர்ச்சியாகவே பெட்டிக்கடைகள் தோற்றம் அமைகின்றது.

இன்றுவரை சுதந்திரபுரம் கிராம பகுதியில் தெருவின் அருகில் உள்ள பெட்டிக்கடைகளில பொருள்களை வாங்குவதையே விரும்புகின்றனர். வீதியில் நின்ற ஒரு நபரிடம் சென்று கதை கொடுத்தபடி ஏன்? பெட்டி கடையில் பொருள்களை வாங்கி வருகிறீர்கள்? என்ற போது என்னை உற்று பார்த்து அடையாளம் கண்டுபிடுத்து விட்டு, "நாங்க அன்றாடம் கூலிக்கு உழைத்து சாப்பிடுறவங்க. எங்கட வருமானத்துக்கு ஏத்த மாதிரித் தானே பொருள்களை வாங்க முடியும். அதுவும் மழை, வெய்யில் என்றால் வருமானமும் சுத்தமா இல்லாமல் போய் விடும். இங்குதான் ஓடி வந்து கடனுக்கு வாங்க முடியும்" என்றவாறு கூறிவிட்டு கடை உரிமையாளரைப்பார்த்து தம்பி இதையும் கணக்கில போடு பாப்பம் என்று கூறிவிட்டுச் சென்றார்.

பெட்டிக்கடை உரிமையாளர் என்பவர் சிறந்த பொது மக்கள் தொடர்பைக் கொண்டிருப்பர். மக்களுக்குத் தேவையான உதவியை சரியான தருணத்தில் வழங்குபவர். ஊரில் உள்ள அனைவரையும் தெரிந்து வைத்திருப்பர் மக்களின் இன்ப துன்பங்களில் கலந்து கொண்டு மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி இருப்பர்.

இதனால் பெட்டி கடைகள் என்றாலே தனிச் சிறப்பைப் பெற்று விடுகின்றன. ஊரவர்கள் பெட்டிக்கடையாளருடன் இணைந்து நண்பர்களாக கூடி கடையின் முன்னால் தைரியமாக அரட்டை அடிப்பார்கள், பல காதல் கதைகள், அரசியல் முடிவுகள், அனைத்தும் இனிதே நிறைவேறும்.

பெட்டிக்கடைகள் ஆரோக்கியமான பண்பாட்டைப் பிரதிபலித்த காலத்தைப் பார்க்கிலும் மேலாக பல்பொருள் அங்காடிகள் பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கும் பண்பாட்டையே பிரதிபலிக்கின்றன. அதனையும் மக்கள் நாடிச் செல்வது கவலைக்குரிய விடயமாகும்.

இவை மக்களின் நடத்தையிலும் சிந்தனையிலும் பாதிப்பு ஏற்படுத்துவனவதாகவும் அமைகின்றன. வருமானத்தை முழுவதுமாக கொடுத்துவிட்டு பொருட்களை வாங்கி வருவதை நாமும் செய்கின்றோம் நவீன வளர்ச்சியில் பெட்டிக்கடைகள் அழிந்து வருவதை ஏற்க முடியாது உள்ளது. இருப்பினும் இவற்றின் தேவை கொரோனா காலப் பகுதியில் ஊரடங்கின் போதே பலரும் உணர்ந்து கொள்ளச் சந்தர்ப்பங்கிட்டியது.

சிறு துரும்பும் பல் குத்த உதவும். பழமையை மறவாது எம்மவருக்கான முயற்சியில் கைகோர்ப்போம்.

**செ.அனுத்திரா**
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# கடத்தப்பட்ட 6 பேர் சடலங்களாக மீட்பு

## மணிப்பூரில் பதற்றம் அதிகரிப்பு

மணிப்பூரில் ஆயுதம் தாங்கிய குகி தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதாக கூறப்படும் மைதேயி இனத்தை சேர்ந்த பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 6 பேரின் உடல்கள் அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. இதனையடுத்து அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது.

ஜிரிபாம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் பாடசாலை, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, ரோந்து பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சமீபகாலமாக மணிப்பூரில் மீண்டும் இரு குழுவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வருகிறது. ஜிரிபாம் மாவட்டத்தில் பழங்குடியின இளம்பெண் சமீபத்தில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு வன்முறையாளர்களால் எரித்துக் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஜிரிபாம் பகுதியில் உள்ள வீடுகள், கடைகளை தீ வைத்து எரித்து குகி இனத்தை சேர்ந்வர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

ஜிரிபாம் மாவட்டத்தில் சி.ஆர்.பி.எஃப் படையினரின் முகாம் மீது குகி ஆயுதக் குழுவினர் தாக்குதல் நடத்தினர். இதைத் தொடர்ந்து, பாதுகாப்பு படை வீரர்கள் பதில் தாக்குதல் நடத்தியதில் 10 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து, மைதேயி மக்கள் இருந்த முகாம்களில் இருந்து 6 பேர் மாயமாகினர். மணிப்பூர் மாநில அரசில் கடைநிலை ஊழியராக பணியாற்றி வந்த லாயிஷ்ராம் ஹீரோஜித்தின் மனைவி, அவரது 2 குழந்தைகள், மாமியார், மனைவியின் சகோதரி உள்ளிட்ட 6 பேர் தான் மாயமாகி உள்ளனர் என தெரியவந்தது.

இதுதொடர்பாக பொலிஸில் லாயிஷ்ராம் ஹீரோஜித் புகார் கொடுத்தார். அவர் கூறும்போது, “எனது மனைவி,



குழந்தைகள், மாமியார் உள்ளிட்ட 6 பேரை ஆயுதம் தாங்கிய குகி தீவிரவாதிகள் கடத்திச் சென்றதை எனது நண்பரின் மனைவி பார்த்துள்ளார். என் குடும்பத்தினரை பத்திரமாக மீட்க வேண்டும் என்று பொலிஸில் புகார் கொடுத்துள்ளேன்.” – என்றார்.

இந்நிலையில், ஜிரிபாம் மாவட்டத்தில் உள்ள போரோ பெக்ராவில் இருந்து 16 கி.மீ. தொலைவில் ஒரு பெண் மற்றும் 2 குழந்தைகளின் உடல்கள் நேற்று முன்தினம் இரவு கண்டெடுக்கப்பட்டன. இந்த நிலையில், மேலும் 3 பேரின் உடல்கள் நேற்று பிற்பகல் கண்டெடுக்கப்பட்டன. மாயமான 6 பேரின் உடல்கள்தான் இவை என்பதை பொலிஸார் உறுதி செய்துள்ளனர். அழுகிய நிலையில் காணப்பட்ட உடல்கள், பிரேதப் பரிசோதனைக்காக எஸ்.எம்.சி.எச். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையே, 6 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட செய்தி பரவியதால், ஜிரிபாம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் பதற்றமான நிலை உருவானது. இதையடுத்து, அந்த மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள், கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டது.

# கஸ்தூரி ஹைதராபாத்தில் கைதுசெய்யப்பட்டார்

தெலுங்கு மக்கள் குறித்து சர்ச்சைக் குரிய வகையில் பேசினார் என பதிவு செய்யப்பட்ட வழக்கில், தலைமறைவாக இருந்த நடிகை கஸ்தூரியை ஹைதராபாத்தில் பொலிஸார் கைது செய்தனர்.

இந்து மக்கள் கட்சி சார்பில் சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில் நடிகை கஸ்தூரி கலந்துகொண்டு பேசும்போது, தெலுங்கு மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்தார். அவரது இந்த பேச்சுக்கு தெலுங்கு பேசும் மக்களிடையே கடும் எதிர்ப்பு எழுந்தது. மேலும், பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, தனது பேச்சுக்கு வருத்தம் தெரிவித்து கஸ்தூரி பேட்டி அளித்தார். அதேநேரத்தில் கஸ்தூரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை, மதுரை உட்பட பல்வேறு பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் அடுத்தடுத்து 6 புகார்கள் அளிக்கப்பட்டன.

அகில இந்திய தெலுங்கு சம்மேளனம் சார்பில் சென்னை எழும்பூர் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட



புகாரின்பேரில், நடிகை கஸ்தூரி மீது 4 சட்ட பிரிவுகளின்கீழ் பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். இதையடுத்து, வழக்கு விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்ற சம்மனை வழங்குவதற்கு போயஸ் கார்டனில் உள்ள கஸ்தூரி வீட்டுக்கு பொலிஸார் சென்றனர். அப்போது அவரது வீடு பூட்டப்பட்டிருந்தது. அவர் தலைமறைவாகி விட்டார் என செய்திகள் வந்தன.

இதனிடையே, முன் பிணை கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் கஸ்தூரி மனு தாக்கல் செய்தார். இந்த மனு விசாரணைக்கு வந்த போது, ‘முன் பிணை வழங்கக் கூடாது’ என அரசுதரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. கஸ்தூரி தரப்பில், “சென்னை கூட்டத்தில் கஸ்தூரி சிலரை குறிப்பிட்டே அவ்வாறு பேசினார். மொத்த சமூகத்துக்கு எதிராகவும் அவர் பேசவில்லை. இருப்பினும் வருத்தம் தெரிவித்துள்ளார்”என வாதிடப்பட்டது.

அப்போது நீதிபதி, “கஸ்தூரி வருத்தம் தெரிவித்து வெளியிட்டுள்ள பதிவு, அவர் பேசியதை நியாயப்படுத்துவது போல் உள்ளது. குறிப்பிட்ட வார்த்தைகளுக்காக அவர் வருத்தம் தெரிவிக்கவில்லை” என்று தெரிவித்ததோடு முன் பிணை மனுவையும் தள்ளுபடி செய்தார். இதையடுத்து, கஸ்தூரியை கைது செய்யும் நடவடிக்கையில் சென்னை மற்றும் மதுரை பொலிஸார் தீவிரம் காட்டினர்.

இந்நிலையில், தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் பதுங்கி இருந்த கஸ்தூரியை சென்னை பொலிஸார் நேற்று இரவு கைது செய்தனர். அவர் இன்று சென்னை அழைத்து வரப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என பொலிஸார் தெரிவித்தனர்.




# சீனாவில் கல்லூரிக்கு அருகில் கத்திக்குத்து தாக்குதல் 8 பேர் பலி

கிழக்கு சீனாவில் உள்ள கல்லூரி ஒன்றுக்கு அருகில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த தாக்குதலில் 17 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

Wuxi நகரில் உள்ள Wuxi Yixing தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் சீன நேரப்படி நேற்று மாலை 6.30 அளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான 21 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மோசமான பரீட்சை முடிவுகள் காரணமாக டிப்ளோமா பெறத் தவறியமையினாலும், தமது பயிற்சிநிலை தொழிலில் கிடைக்கும் சம்பளத்தில் திருப்தியடையாது போனமையினாலும், இந்த தாக்குதலை நடத்தியதாக அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதேவேளை, கடந்த திங்கள் கிழமை சீனாவின் தெற்கு நகரமான ஜுஹாயில் மைதானமொன்றில் கூடியிருந்த சிலர் மீது நபரொருவர் மகிழுந்தைச் செலுத்தியதில் சுமார் 35 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.








# அமெரிக்காவில் அரசு வேலை குறைக்கப்படும்: ட்ரம்ப் நிர்வாகத்தின் புதிய நிர்வாகி தகவல்

அமெரிக்காவில் அரசு வேலை பெருமளவில் குறைக்கப்படும் என ட்ரம்ப் நிர்வாகத்தின் புதிய நிர்வாகி விவேக் ராமசாமி கூறியுள்ளார்.




அமெரிக்காவில் சமீபத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். அவரது பிரச்சார குழுவில் இடம்பெற்ற உறுப்பினர்கள் எல்லாம் முக்கிய பதவிகளில் பணியமர்த்தப்படவுள்ளனர்.

அமெரிக்க அரசு நிர்வாகத்தை மேம்படுத்த அரசு திறன் துறை உருவாக்கப்படும் என ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார். இத்துறைக்கு பிரபல தொழிலதிபர்கள் எலான் மஸ்க், இந்திய அமெரிக்கர் விவேக் ராமசாமி ஆகியோர் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்க அரசு நிர்வாகத்தில் கொண்டுவரவுள்ள மாற்றங்கள் குறித்து விவேக் ராமசாமி தெரிவிக்கையில்,

“வொஷிங்டன் அரசு நிர்வாகத்தில் உள்ள பல லட்சம் பேரை அகற்றும் பணியை எலான் மஸ்க் மற்றும் நானும் தொடங்கவுள் ளோம். இதன் மூலம் நாங்கள் நாட்டை காப்பாற்றுவோம். அரசு நிர்வாகத்தில் அதிகாரிகள் அதிகளவில் இருந்தால், புதுமைகள் எதுவும் ஏற்படாது. செலவுதான் அதிகரிக்கும். அமெரிக்காவின் பல துறைகளில் நிலவும் உண்மையான பிரச்சினை இதுதான்.

கடந்த 4 ஆண்டுகளாக நாடு வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இதிலிருந்து நாட்டை காக்க நாம் போராட வேண்டும். அமெரிக்க அரசியலில் கடந்த வாரம் நடந்த மாற்றம் மூலம், அமெரிக்காவில் மீண்டும் எழுச்சி தொடங்கவுள்ளது. அமெரிக்க மக்களுக்கு சிறந்த எதிர்காலமும், புதிய விடியலும் ஏற்படவுள்ளது. நமது குழந்தைகள் வளர்ச்சி அடைவர். கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மூலம் சிறந்த நபர்களுக்கு வேறுபாடின்றி வேலை கிடைக்கும்.

அமெரிக்க திறன் துறையில் (டி.ஓ.ஜி.இ) ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஒவ்வொரு வாரமும் அமெரிக்க மக்களுக்கு நேரடி ஒளிபரப்பு மூலம் தெரிவிப்போம். அமெரிக்க அரசின் அளவை ஒழுங்குபடுத்துவதுதான் எங்கள் இலக்கு. அரசு பணிகள் வெளிப்படையாக இருக்கும். புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ள ட்ரம்ப் எங்களுக்கு அளித்துள்ள பணியை எலான் மஸ்க்கும் நானும் நிறைவேற்றுவோம்.” - என்றார்.

கனடா முரசு
பக்கங்கள் 02
ஞாயிற்றுக்கிழமை 17/11/2024

## ஜேர்மனிக்கான கனடாவின் தூதுவர் 65 ஆவது வயதில் காலமானார்

ஜேர்மனிக்கான கனடாவின் தூதுவர் John Horgan அவரது 65 ஆவது வயதில் காலமானார்

ஜேர்மனிக்கான கனடாவின் தூதுவர் John Horgan, 2017 இல் சிறுபான்மை அரசாங் 02




# இந்திய வம்சாவளியினர் கோயில்கள் மீது மாத்திரம் தாக்குதல் நடத்தும் காலிஸ்தான்

**கனடாவில் 4 கோடி மக்கள் வசிக்கின்றனர். இதில் 20 லட்சம் பேர் இந்திய வம்சாவளியினர் ஆவர். அவர்களில் 7.71 லட்சம் பேர் சீக்கியர்கள் ஆவர். இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் தனி நாடு கோரி போராடிய காலிஸ்தான் தீவிரவாதிகளில் பலர் கனடாவில் தஞ்சமடைந்து உள்ளனர். அங்கிருந்து இந்தியாவுக்கு எதிராக நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

கனடாவின் டொரன்டோ மாகாணத்துக்கு உட்பட்ட பிராம்ப்டன் நகரில் உள்ள இந்து சபா கோயில் வளாகத்தில் அண்மையில் இந்திய தூதரகம் சார்பில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. அப்போது காலிஸ்தான் தீவிரவாதிகள் கோயில் மீதும், பக்தர்கள் மீதும் தாக்குதல் நடத்தினர்.

இலங்கையை பூர்விகமாக கொண்ட இந்துக்கள், நேபாளத்தை சேர்ந்த இந்துக்கள், பங்களாதேஷை சேர்ந்த இந்துக்கள் கனடாவில் பல் வேறு கோயில்களை கட்டி உள்ளனர். இந்த கோயில்கள் மீது காலிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவது கிடையாது. ஆனால் இந்திய வம்சா வளியினர் கட்டிய இந்து கோயில்கள் மீது மட்டும் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக ஆதரவு அளித்து வருகிறார். காலிஸ்தான் தீவிரவாதி நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்திய தூதரக அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக பகிரங்கமாக குற்றம் சாட்டி வருகிறார். இந்த விவகாரம் 02

# கனடா உள்ளிட்ட நாடுகளுக்கு 2022 இல் 5.6 லட்சம் இந்தியர்கள் புலம் பெயர்வு

2022 ஆம் ஆண்டில் ஓ.இ.சி.டி. நாடுகள் என்று கூறப்படும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு நாடுகளுக்கு 5.6 லட்சம் இந்தியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற ஓ.இ.சி.டி. நாடுகளுக்கு இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் குடிபெயர்ந்து விடுகின்றனர்.

உயர் படிப்பு, வேலை, திருமணம் முடித்தல் போன்ற பல்வேறு காரணங்களுக்காக அந்த நாடுகளுக்கு மக்கள் குடிபெயர்கின்றனர். அந்த வகையில் 2022 ஆம் ஆண்டில் இந்தியாவைச் சேர்ந்த 5.6 லட்சம் பேர், ஓ.இ.சி.டி. நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். இந்த ஓ.இ.சி.டி. நாடுகளுக்கு குடி பெயரும் நாடுகள் வரிசை யில் இந்தியர்கள்தான் முதலிடத்தில் உள்ளனர். கடந்த 2021 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2022 ஆம் ஆண்டில் 35 சதவீதம் கூடுதலாக இந்தியர்கள் ஓ.இ.சி.டி. நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ள தகவல் கிடைத்துள்ளது.

2022 இல் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்த 5.6 லட்சம் இந்தியர்களில் 1.12 லட்சம் பேர் பிரிட்டனுக்குச் சென்றுள்ளனர்.




அமெரிக்காவுக்கு 1.25 லட்சம் பேரும், கனடாவுக்கு 1.18 லட்சம் பேரும் இடம்பெயர்ந்துள்ளனர். அதேநேரத்தில் ரஷ்யா, ரொமேனியா நாடுகளில் இருந்து தலா 2.7 லட்சம் மக்கள் ஓ.இ.சி.டி. நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். ரஷ்யாவிலிருந்து துருக்கி, இஸ்ரேல், ஜெர்மனி நாடுகளுக்கு அதிக மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

# இந்திய இளம்பெண்ணின் உயிரைப் பறித்த பேக்கரி ஓவனை அகற்ற திட்டமிடப்பட்டது



கனடாவில், இந்திய இளம்பெண்ணொருவர் பேக்கரி ஓவனுக்குள் சிக்கி உடல் கருகி உயிரிழந்த விடயத்தில், அந்த ஓவனை அகற்ற ஏற்கனவே திட்டமிடப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

கனடாவுக்கு புலம்பெயர்ந்த குர்சிம்ரன் கௌர் என்னும் இளம்பெண்ணும் அவரது தாயும், Halifax இல் அமைந்துள்ள வால்மார்ட் பல்பொருள் அங்காடியில் பணி செய்துவந்துள்ளார்கள்.

ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி, மகளைக் காணாமல் தேடிய அவரது தாய், குர்சிம்ரனுக்கு போன் செய்ய, அவரது மொபைல் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்திருக்கிறது.

அப்படி தன் மகள் மொபைலை சுவிட்ச் ஆஃப் செய்யமாட்டார் என்பதை அறிந்த அவரது தாய் மகளைத் தேடி அலைய, குர்சிம்ரன், ஆள் நடக்கும் அளவிலான ஓவன் ஒன்றிற்குள் உயிரிழந்துகிடந்தது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், அந்த ஓவனில் ஏற்கனவே பிரச்சினை இருந்திருக்கலாம் என தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

அதனால், அந்த ஓவனை அகற்ற ஏற்கனவே திட்டமிட்டிருந்ததாக வால்மார்ட் பல்பொருள் அங்காடி தெரிவித்துள்ளது.

அப்படி அந்த பல்பொருள் அங்காடி அந்த ஓவனை அகற்றியிருக்குமானால், குர்சிம்ரனுக்கு இப்படி ஒரு கோர முடிவு ஏற்பட்டிருக்காது என்பது குறிப்பிடத்தக்கது.






# வேலை நிறுத்தத்தில் குதித்தனர் 55 ஆயிரம் தபால் ஊழியர்கள்

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கனடா தபால் தொழிற்சங்கங்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இந்த வேலைநிறுத்தத்தில் சுமார் 55,000 பேர் கலந்து கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வேலை நிறுத்தம் விடுமுறை காலத்திற்கு முன்னதாக விநியோகங்களை கடுமையாக பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3 நாள்கள் வேலை நிறுத்தம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. 6 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது முறையாக வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்கள் பணவீக்கம் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்ப அதிக ஊதியம் கோரி வருகின்றனர்.

சேவைக்கு ஏற்ற ஊதிய உயர்வை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். நான்கு ஆண்டுகளில் தபால் ஊழியர்களுக்கு 11.5 சதவீத ஊதிய உயர்வு வழங்க அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

எனினும், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது போதாது எனக் கூறப்படுகிறது. ஆனால் 22 சதவீத ஊதிய உயர்வு, ஊதியத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு, சிறந்த சுகாதார பாதுகாப்பு மற்றும் இதர சலுகைகள் ஆகியவற்றை தொழிற்சங்கம் கேட்டுள்ளது.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக இந்திய தூதரக அதிகாரிகளை அவர் வெளியேற்றி உள்ளார். கனடாவில் வசிக்கும் காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக ஜஸ்டின் செயல்பட்டு வருகிறார். இதன்காரணமாக அவர்கள், கனடாவின் பல்வேறு பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றனர்.

இந்த சூழலில் கனடா அரசுக்கு பேரதிர்ச்சி அளிக்கும் வகையில் புதிய கோஷத்தை காலிஸ்தான் தீவிரவாதிகள் எழுப்பி உள்ளனர். "கனடாவில் வசிக்கும் வெள்ளையின மக்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். அவர்கள் ஐரோப்பிய நாடுகள் அல்லது இஸ்ரேலுக்கு திரும்பிச் செல்ல வேண்டும்" என்று அவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

கனடாவின் சர்ரே நகரில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் சார்பில் அண்மையில் பேரணி நடத்தப்பட்டது. இதில் பங்கேற்றவர்கள் புதிய கோஷத்தை எழுப்பி, கனடா அரசுக்கு சவால் விடுத்து உள்ளனர்.

இதுதொடர்பான காணொலி, கனடாவின் நேஷனல் டெலிகிராப் ஊடகத்தின் மூத்த செய்தியாளர் டேனியல் போர்ட்மேன் வெளியிட்டு உள்ளார். அதோடு அவர் வெளியிட்டு உள்ள பதிவில், "சர்ரே நகரில் காலிஸ்தானியர்கள் பேரணி நடத்தினர். அப்போது அவர்கள், கனடா தங்களுக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடினர். வெள்ளையின மக்கள் ஐரோப்பா அல்லது இஸ்ரேலுக்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்று காலிஸ்தானியர்கள் கூறுகின்றனர். இவர்கள் இவ்வாறு பேச நாம் அனுமதிக்கலாமா? நமது வெளியுறவு கொள்கையை வரையறுக்க இவர்கள் யார்" என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

## ஜேர்மனிக்கான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை அமைத்தார். மேலும் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கொவிட்-19 தொற்றுநோய்களின் போது பெரும்பான்மையை வென்றார்.

இந்த நிலையில், இவர் தனது 65 ஆவது வயதில் புற்றுநோயினால் கடந்த செவ்வாயன்று காலமானார்.